
# கிறிஸ்தவ குடும்பம் - திருமணம்

## பற்றிய



# திருச்சபையின் போதனை

# பொருளடக்கம்


I. கிறிஸ்தவ திருமணத்தின் இயல்பும் அதன் நோக்கமும் ... ... ... 2

II. கிறிஸ்தவ திருமணத்தின் கொடைகள் ... 4

III. கிறிஸ்தவ திருமணத்தினதும் குடும்ப வாழ்வினதும் புனரமைப்பு ... ... 19

IV. கிறிஸ்தவ குடும்பம் திருச்சபையிலும், இன்றைய உலகிலும் ஆற்ற வேண்டிய பணி ... 23

V. கிறிஸ்தவ திருமணம், கிறிஸ்தவ குடும்ப வாழ்வு அப்போஸ்தலம் என்பதற்கு ஆயத்தம் ... 31

VI. கிறிஸ்தவ குடும்பங்களின் சிறந்த மாதிரிகை — திருக்குடும்பம் .... 35

வெளியீடு – 10

அச்சேற்றலாம் :
+ வ. தியோகுப்பிள்ளை
யாழ். மறை மாவட்ட ஆயர்.

ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.
*3-4-80*

---

THE LORD IS MY SHEPHERD

குடும்ப மேய்ப்புப் பணி நிலையம்,

சேந்தான்குளம் — இளவாலை

+

மங்களம் மரியே

# கிறிஸ்தவ குடும்பம் - திருமணம்

# பற்றிய

## திருச்சபையின் போதனை

முன்னுரை :

ஐக்கிய நாடுகளின் மாமன்றமானது 1980 ஐ சருவதேசரீதியிற் குடும்ப வாழ்வின் ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. இன்றைய உலகிற் குடும்பம் வகிக்கும் முக்கிய இடத்தை உணர்ந்த பரிசுத்த தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் 1980ஆம் ஆண்டு புரட்டாசித் திங்கள் பரிசுத்த நகரிற் கூட இருக்கும் அனைத்து உலகின் ஆயர் பேரவையின் ஆய்வுப் பொருளாக இன்றைய உலகில் கிறிஸ்தவ குடும்பத்தின் பணி என்னும் விடயத்தையே தெரிந்துள்ளார்.

சமுதாயத்தின் உயிர் அணு என விளங்கும் குடும்பத்தைப் பற்றியும், இன்னும் சிறப்பாகத் திருச்சபையின் உயிர் அணு என விளங்கும் கிறிஸ்தவ குடும்பத்தைப் பற்றியும், தாய் திருச்சபை தனது நீண்ட கால வரலாற்றினூடாக ஆர்வம் மிக்க வகையில் அக்கறை காட்டியுள்ளது. மேற்படி விடயத் தொடர்பில் முக்கியமான இரு சம்பவங்களை நினைவு படுத்துதல் பொருத்தமாகும். நூறு வருடங்களுக்கு முன், அதாவது 1880 இல் 13ஆம் சிங்கராயர் பாப்பிறை கிறிஸ்தவ திருமணத்தின் பரிசுத்ததனம், ஒருமை, கட்டவிழாமை ஆகிய பண்பு

களை விளக்கும் வகையில் 'Arcanum Divinae' என்னும் சுற்று மடலை வெளியிட்டார். ஐம்பது வருடங்களுக்கு முன், அதாவது 1930 இல் 11ஆம் பத்திநாதர் பாப்பிறை திருமணம் பற்றியும், குடும்ப நலம் பேணும் ஒழுக்க நெறி பற்றியும் இனிது விளக்கி, இக்கால தவறுகளி னின்றும், ஒழுங்கீனங்களிலிருந்தும் விசுவாசிகளைத் தற் காக்கும் பொருட்டு உலகப் பிரசித்தி பெற்ற Casti Connubii என்னும் சுற்று மடலை உலகெங்கணும் அனுப்பினர். ஆகவே, ஆயர் பேரவை முன் கூறிய இரு சுற்று மடல்களையுந் துருவி ஆராய்ந்து இக்கால உலகிற் கிறிஸ்தவ குடும்பத்திற்கு உரிய இடத்தை வரையறுத்துக் கூறும்.

கிறிஸ்தவ குடும்பத்தின் புனிதம், ஒருமை, பிரிவு படாமை போன்ற பண்புகள் பல்வேறு வகைகளில் நமது நாட்டிற் கூடத் தாக்கப்படுகின்றன. ஆகவே இக்கால தவறுகளிலிருந்தும் ஒழுக்கக் கேடுகளிலிருந்தும் நமது விசுவாசிகளை எச்சரித்துக் காப்பாற்றும் வண்ணம் குடும்ப நலனைப் பற்றித் திருச்சபை காலா காலமாகப் போதித்துவரும் படிப்பினைகளை இங்கு எடுத்துக் கூறுதல் பொருத்தமுடையதாகும்.

## I கிறிஸ்தவ திருமணத்தின் இயல்பும் அதன் நோக்கமும்

திருமணம் என்பது ஆண் பெண் ஆகிய இருவரி டையே நிரந்தரமாக அமைந்த ஓர் ஒன்றிப்பு. இந்த ஒன்றிப்பு மனுக்குல விருத்திக்காகவும் தம்பதிகளின் வாழ்வை நிறைவு படுத்தும் பொருட்டும் இறைவனுல் உண்டாக்கப்பட்டது. இந்த ஒன்றிப்பையே மனுக்குல மீட்பராகிய கிறிஸ்து யேசு புதிய ஏற்பாட்டின் அருட் சாதனங்களுள் ஒன்றான மெய்விவாகம் என்னும் உன் னத தானத்துக்கு உயர்த்தியுள்ளார். அதாவது தப்பாது அருள் வாழ்வை வழங்கும் அடையாளங்களுள் ஒன்றாக உயர்த்தியுள்ளார். கிறிஸ்தவ திருமணமானது பாஸ்கா

மறை நிகழ்ச்சியின் வழியாகக் கிறிஸ்துவுக்கும் திருச் சபைக்கும் இடையில் உண்டான நிலையான அன்புக்கு அடையாளமாகும். ''கிறிஸ்து திருச்சபைக்கு அன்பு செய்து அதற்காகத் தம்மையே கையளித்தார். அத் திருச்சபை கறைதிரையோ வேறு எக்குறையோ இன்றிப் பரிசுத்தமும் மாசற்றதுமாய்த் தம் திருமுன் மகிமை யோடு துலங்கச் செய்ய வேண்டுமென்று அவர் திரு வார்த்தையாலும் முழுக்காலும் அதைத் தூயதாக்கிப் பரிசுத்தமாக்குவதற்குத் தம்மைக் கையளித்தார். அவ் வாறே கணவர்களும் தம் மனைவியைத் தம் சொந்த உடலெனக் கருதி அவர்களுக்கு அன்பு செய்ய வேண் டும். மனைவிக்கு அன்பு காட்டுபவன் தனக்கே அன்பு காட்டுகிறான். தன்னுடைய உடலை எவனும் என்றும் வெறுப்பதில்லை. எவனும் அதைப் பேணி வளர்க்கிறான். கிறிஸ்துவும் அவ்வாறே திருச்சபையைப் பேணி வளர்க் கிறார். ஏனெனில் நாம் அவரது உடலின் உறுப்புக்கள் அதனால் கணவன் தன் தாய் தந்தையை விட்டுத் தன் மனைவியோடு கூடி இருப்பான். இருவரும் ஒரே உடலாய் இருப்பார்கள். இதில் அடங்கிய உண்மை பெரிது. இது கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் பொருந் தும் என்று நான் சொல்லுகிறேன்.'' (எபே. 5:25—32)

அன்பு, பிரமாணிக்கம் என்பவற்றின் மேல் எழுந்த உடன்படிக்கையின்படி கடவுள் தம் மக்களை முன்பு சந் தித்தது போல இப்போது மாந்தரின் மீட்பர், திருச் சபையின் மணமகன், திருமணம் என்னும் அருட்சாத னத்தின் வழியாகக் கிறிஸ்தவ மணமக்களைச் சந்திக்க வருகிறார். அவர் தம் திருச்சபைக்கு அன்பு செய்து அதற்காகத் தம்மையே கையளித்தது போல மணமக் களும் ஒருவரொருவருக்குத் தங்களைக் கையளித்து நிலை யான பிரமாணிக்கத்துடன் அன்பு செய்ய வேண்டு மென்ற நோக்கத்தோடு அவர் அவர்களோடு தங்கியி ருக்கிறார். (G. S. n. 48)

இவ்வாறு கிறிஸ்தவ திருமணம் கிறுஸ்துவைச் சந்திக்கும் ஒரு நிகழ்ச்சி. இந்தச் சந்திப்பு, திருமணத்தாற் குறிக்கப்படும் அருள் உயிரை வழங்குவதுமல்லாமல் கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் இடையில் உள்ள அன்பைப் பிரதிபலிக்கும் சாயலாகவும் அமையும்.

புதிய ஏற்பாட்டின் அருட்சாதனங்களின் தாபகரான கிறிஸ்து தமது மணவாட்டியாகிய திருச்சபையிடமே அவற்றைக் கையளித்தார். எனவே திருமணம் முறையே நிறைவேற்றப் படுவதையும் கிறிஸ்தவ குடும்பம் செவ்வனே செயற்படுவதையுங் குறித்துச் சட்டங்கள் இயற்றத் திருச்சபைக்கு மாத்திரமே உரிமையுண்டு.

## II கிறிஸ்தவ திருமணத்தின் கொடைகள்

திருச்சபையின் புகழ் பெற்ற வேத பண்டிதரான புனித அகுஸ்தீனுரின் கருத்துப்படி கிறிஸ்தவ திருமணம் பற்றிய முழுப் போதகமும் மேல் வரும் மூன்று தலைப்புக்களில் அடங்கியுள்ளது. திருமணத்தையே ஒரு கொடையாக்கும் கொடைகள் எவையெனின்: புத்திர சந்தானம், பிரமாணிக்கம், அருட்பிரசாதம் என்பனவாம்.

### I புத்திர சந்தானம்

மெய் விவாகத்தால் நாம் அடையும் நலன்களுட் புத்திர சந்தானம் முதலிடத்தை வகிக்கின்றது. தொடர்ந்து புனித அகுஸ்தீனுர் விளக்கந் தரும் வகையில் ''புத்திர சந்தானம் என்னும்போது பிள்ளைகள் அவலுடன் வரவேற்கப்படுவதையும், பரிவன்புடன் வளர்க்கப்படுவதையும் இறைப்பற்றுடன் பயிற்றப் படுவதையுமே நாம் கருதுகின்றோம்'' என்கிறார். திருமண ஸ்தாபனமும் திருமண அன்பும் பிள்ளைகளைப் பெற்று வளர்ப்பதையே இயல்பான நோக்கமாகக் கொண்டுள்ளன. (G. S. n. 48)

பதினேராம் பத்திநாதர் பாப்பிறை கிறிஸ்தவப் பெற்ருேருக்கு அளிக்கும் அறிவுரையாவது 'மண்ணுலகில் மனித இனம் பலுகிப் பெருகி நீடிக்கச் செய்வதும் உண்மைக் கடவுளை வழிபடும் ஒரு குழுவினரை அமைப்பதும்மாத்திரமே கிறிஸ்தவப்பெற்ருேரின்கடமை என எண்ணலாகாது. மாருக அவர்கள் இறை மக்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களையும் பெற்றெடுப்பார்களாக. இவ்வாறு இரட்சகராகிய இறைவனை வழிபடும் குழுவினர் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக அதிகரிப்பார்களாக. (Casti Connubii C. T. S. London edN. 14) எனவே புத்திர சந்தானமானது பெரும் தொல்லைதரும் பாரச்சுமை என்ற கருத்து, கிறிஸ்தவ அல்லது மனித கண்ணேட்டத்துக்கு உரியதன்று.

ஆயினும் எத்தனை பிள்ளைகளைப் பெற்றெடுக்க முடியுமோ அத்தனை பிள்ளைகளையும் பெற்றெடுக்க வேண்டுமென்று பெற்ருேர்கள் எண்ணலாகாது. ஆகவே, அவர்கள் தங்களின் அலுவலை மனிதனுக்குரிய பொறுப்புணர்ச்சியுடனும் நிறைவேற்றுவார்கள். கடவுள்பால் பணிவான வணக்கத்தோடு பொது ஆலோசனையாலும் முயற்சியாலும் அவர்கள் சரியான முடிவுக்கு வருவார்கள். இவ்வாறு செய்யும்போது அவர்கள் தங்களின் நலத்தைக் கருதுவதுடன் தங்களுக்குப் பிறந்த, பிறக்கப் போகிற குழந்தைகளின் நலத்தையுங் கருதுவர். அவர்களின் ஆன்ம உடல் வாழ்க்கை நிலைமைகளையும், கால நிலைமைகளையுங் கருத்திற் கொள்வர். அவர்களின் குடும்பச் சமூகத்தினுடையவும் உலக சமூகத்தினுடையவும் திருச்சபையினுடையவும் நலனைபற்றியும் எண்ணுவர். இறுதியாக மணமக்களே கடவுளின் முன்னிலையில் இந்த முடிவைச் செய்ய வேண்டும். கிறிஸ்தவ மணமக்கள் தங்கள் விருப்பப்படி செயற்பட முடியாது. ஆனல் இறைச் சட்டத்துக்குச் சரியாக ஒத்திருக்கும் மனச்சான்றிஞல் எப்போதும் வழி நடத்தப்படவேண்டும் என்பதை அவர்கள் உணர்வார்களாக. மேலும் இறைச் சட்டத்

திற்கு நற்செய்தி ஒளியில் அதிகார பூர்வமாகப் பொருள் விளக்கிக் கூறும் திருச்சபையின் ஆசிரியத்துக்கு அவர்கள் அமைந்து நடப்பார்களாக. (Vat II G. S. n. 50)

பெற்றெடுக்கும் பிள்ளைகளின் எண்ணிக்கையைப் பற்றியோ அவர்களுக்காகச் செய்யப்படும் தியாகம் பற்றியோ எடுக்கப்படும் தீர்மானங்கள் இன்பமயமான வாழ்வை நிச்சயப்படுத்தும் தீர்மானங்களாக இருக்கப் படாது. பெற்றோர், மெய் விவாகம் என்னும் அருட்சாதனம் வழங்கும் அருளையும் திருச்சபையின் போதகத்தையும் இறைவன் திருமுன் தியானிக்க வேண்டும் அதன் விளைவாக அவர்கள் மாபெரும் உண்மையை உணர்வார்கள். அதாவது தங்கள் பிள்ளைகளின் வாழ்விலே சௌகரியங்களிற் சிலவற்றைக் குறைப்பதைக் காட்டிலும் வெவ்வேறு வாழ்க்கை நிலைகளின் அழகை அனுபவிக்க உதவும் தம்பி தங்கையரின் பிறப்பைத் தடுத்து விடுவது ஆட்சேபனைக்குரியதாகும். (Hom. in Washington n. 5)

பிறப்பைக் கட்டுப் படுத்துவதற்குச் சட்ட விரோதமான செயல் முறைகளைக் கையாளப்படாது. பாப்பிறை பதினோராம் பத்திநாதர் அழுத்தந் திருத்தமாக வெளியிட்டதாவது ''கணவன் மனைவியரின் உடலுறவின் நோக்கம் ஓர் உயிரைத் தோற்றுவிப்பதேயாம். மாறாக ஓர் உயிரைத் தோற்றுவிப்பதற்குப் பதில் ஒருவன் இயற்கைக்கு இயல்பாக உள்ள ஆற்றலைச் செயற்கை முறையால் தடுத்து விடுவானாயின் இறைச் சட்டத்துக்கு மாறாக மாபெரும் பாவம் புரிகின்றான்'' (Casti Connubii).

உண்டான கருவைச் சிதைப்பதற்குத் திட்டமிட்டுச் செய்து கொண்ட நேரடித் தடுப்பு முறை சுகாதார நோக்கத்துக்காகச் செய்து கொண்டாலுங் கூட, சட்ட விரோதமானது என்று முற்றாக விலக்கப்பட வேண்டிய தடுப்பு முறையாம்.

மேலும் திருச்சபையின் ஆசிரியம் அடிக்கடி எச்சரித்துள்ளது போல் ஆணும் பெண்ணும் சில காலத்துக்கோ நிரந்தரமாகவோ தங்களை நேரடியாக மலடு ஆக்குதல் விலக்கப்பட வேண்டிய தடுப்பு முறையாம். இன்னும் திருமணச் சேர்க்கைக்கு முன் நிகழ்த்தும் எச் செயலும் சேர்க்கையுடன் இணைந்த எச் செயலும் சேர்க்கையின் முடிவாக விளையும் எச் செயலும் பிறப்பைத் தடுப்பதாக இருத்தல் ஆகாது. (Paul VI Humanae Vitae n. 14. G. S. n. 51)

ஆயினும், கணவன் மனைவியர் தங்கள் உடல் உள நிலைகளைப் பொறுத்து அல்லது பிற நிபந்தனைகளின் நிமித்தம் பிறப்பின் கால எல்லையை நீடிக்க விரும்பினால் திருச்சபை அவர்களுக்குச் சலுகை ஒன்று அளிக்கிறது. அதாவது இயற்கை ரீதியின் படி கருக் கொள்ளாத செழிப்பற்ற கால வட்டத்தை மனதிற் கொண்டு அக்கால எல்லைக்குள் தம்பதிகள் தங்கள் மணச் சேர்க்கையை வைத்துக் கொள்ளல் விலக்கப்பட்டதன்று என்று திருச்சபை போதிக்கிறது. இவ்வாறாக ஒழுகும் போது ஒழுக்க நெறி பேணப் படுவதுமன்றி இனப் பெருக்கமுங் கட்டுப்படுத்தப்படுகிறது. (Humanae Vitae n. 16)

தாங்கள் பெற்றெடுத்த பிள்ளைகளுக்குக் கல்வி புகட்டுதல் பெற்றோரின் புனித கடமையும் உரிமையுமாகும் கிறிஸ்தவ கல்வி முறையின் சிறப்பான நோக்கம் இறையருளுடன் ஒத்துழைத்து உண்மையான முழுமையான கிறிஸ்தவனை உருவாக்குவதேயாம். அதாவது புனித சின்னப்பரின் கூற்றுப்படி திருமுழுக்கினுற் புதுப்பிறப் படைந்தவர்களில் கிறிஸ்து உருவாக்கப்படுவதாம். அருமைக் குழந்தைகளே, குழந்தையைப் பெற்றெடுக்கும் தாய்போல் உங்களிற் கிறிஸ்து உருவாகும் வரை மறுபடியும் நான் உங்களுக்காக வேதனையுறுகின்றேன், (Gal 4-9)

ஏனெனில், கிறிஸ்தவன் மனித இயல்புக்கு மேலான ஒரு வியத்தகு வாழ்வு வாழ வேண்டியவன். அந்த

வாழ்வு நெறி அவனுடைய மற்றும் எல்லாச் செயல்களிலும் பிரதிபலிக்க வேண்டும். இதன் நிமித்தமாகவே கிறிஸ்தவ கல்வி முறையானது மனித வாழ்வின் எல்லா அம்சங்களையும், அதாவது அவனது ஆன்ம, சரீர, குடும்ப சமுதாய அறிவியல் போன்ற எல்லாத் துறைகளிலும் செலுத்தப்பட வேண்டியதாம். அவனது வாழ்வைச் சீர் கெடுக்கும் பொருட்டு அன்று, மாறாக கிறிஸ்துவின் எடுத்துக் காட்டின் படியும் அவரது போதனையின் படியும் அதை உன்னத நிலைக்குக் கொணர்ந்து முழுமைப் படுத்துவதற்கேயாம். (Pius XI Divini Illius Magistri)

## II பிரமாணிக்கம்

பிரமாணிக்கம் என்பது புனித அகுஸ்தீனுரின் கருத்துப்படி 'மண ஒப்பந்தமானவர்கள் களவில் வேறு எவரோடும் பால் உறவு கொள்ளலாகாது'. 'திருமண ஒப்பந்தத்தின் படி ஆணும் பெண்ணும் இனி இருவர் அல்லர், ஒரே உடல்', இருவரும் நெருங்கி இணைந்து செயல்களிலும் ஒன்றிப்பதால் ஒருவருக்கொருவர் உதவியும் ஊழியமும் செய்கின்றனர். தங்கள் ஒன்றிப்பை உணர்கின்றனர். நாளுக்கு நாள் அவ்வுணர்வில் வளர்கின்றனர். ஒருவருக்கொருவர் தங்களையே கொடையாக அளித்தலே இந்த நெருங்கிய ஒன்றிப்பு. எனவே இவ்வொன்றிப்பும் குழந்தைகளின் நலனுமே முழுப் பிரமாணிக்கத்துக்கும் பிரிக்க முடியாத ஒன்றிப்புக்கும் காரணமாய் உள்ளன. (G. S. n. 48)

அன்னியோன்னிய பிரமாணிக்கமானது இறைவனுல் நிறுவப்பட்ட தம்பதிகளின் சமத்துவத்திலேயே கட்டப்படுகின்றது. ''கணவன் தன் மனைவிக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்யட்டும், அவ்வாறே மனைவியும் கணவனுக்குக்கடமைசெய்யட்டும், மனைவிக்குத்தன் உடல் மேல் உரிமையில்லை. கணவனுக்கே அந்த உரிமை உண்டு. அவ்வாறே கணவனுக்கும் தன் உடல் மேல் உரிமையில்லை. மனைவிக்கே அந்த உரிமை உண்டு. ஒருவருக்

கொருவர் செய்ய வேண்டிய கடமையை மறுக்காதீர்கள். செபத்தில் ஈடுபடுவதற்காகச் சிறிது காலத்துக்கு அக்கடமையைச் செய்யாமலிருக்கலாம். ஆனல் அதற்கு இருவரும் உடன்பட வேண்டும். அதன் பின் முன் போற் கூடி வாழுங்கள். இல்லாவிட்டால் தன்னடக்கக் குறைவைப் பயன்படுத்திச் சாத்தான் உங்களைச் சோதிப்பான்''. (1 கொரி. 7: 3-5)

தம்பதிகளிடையே நிலவும் பிரமாணிக்கமானது, பதிஞேராம் பத்திநாதரின் கூற்றுப்படி ஒருமை, திருமணக் கற்பு, பரிவன்பு, பெருந்தன்மையுங் கௌரவமுமுள்ள பணிவு போன்ற பண்புகளை உள்ளடக்குகிறது. பிரமாணிக்கம் என்ற பெயரில் தம்பதிகளிடையே பிரதானமாக நிலவ வேண்டியது அசைக்க முடியாத ஒருமைப்பாடு. இந்த ஒருமைப் பாட்டின் சிறந்த எடுத்துக்காட்டு ஆதிப் பெற்ருேரின் விவாகத்தில் இனிதே விளங்குகின்றது. அதாவது, உலகைப் படைத்தவரின் ஆணையின்படி விவாகமானது ஓர் ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் இடையில் நிலவ வேண்டியது என்பதே. ''ஆகவே அவர்கள் இருவர் அல்லர் ஒரே உடல்'' (மத்: 19. 6) என்ற எங்கள் ஆண்டவர் யேசுக்கிறிஸ்துவின் போதகத்தின் அடிப்படையில் திரிதேந்து திருச்சங்கமும், ''இப்பந்தனத்தால் இருவர் மாத்திரமே இணைக்கப்பட்டு ஓர் உடல் ஆகின்றனர்'' என்கிறது.

ஆகவே, எங்கள் ஆண்டவர் யேசுக்கிறிஸ்து எல்லாவித பலதாரப் பழக்கத்தையும், ஏககால அல்லது வரிசை முறைப்படியுள்ள பல கணவர் பழக்கத்தையும் கற்பு நெறிக்கெதிரான எல்லாச் செயல்களையும் வன்மையாகக் கண்டித்துள்ளார். அது மட்டுமன்று, மெய்விவாகத்தின் எல்லைப் புறங்களையும் புனிதமாகப் பேணும் படி மனதில் எழும் எந்தவித தீய எண்ணங்களையும் ஆசைகளையும் விலக்கி இருக்கின்ருர். ''ஆனல் உங்களுக்குச் சொல்லு

கிறேன் ஒரு பெண்ணைக் காம இச்சையோடு நோக்குப வன் எவனும் ஏற்கனவே அவளோடு விபசாரம் செய் தாயிற்று'' (மத்.5 : 28). தம்பதிகளுள் ஒருவரின் சம் மதங் கூட ஆண்டவர் யேசுவின் வார்த்தைகளை அர்த்த மற்றவையாக்க முடியாது. மனிதன் எவனும் மாற் றவோ மறைக்கவோ முடியாத முறையில் அவை இயற்கையோடியைந்த தெய்வீக சட்டத்தின் பிரகடன மாகும். (Casti Connubii n 20—21)

திருமண அன்பு தம்பதிகளின் எல்லாக் கடமைகளை யும் ஊடறுத்துச் செல்ல வேண்டியதுமன்றிக் கிறிஸ்தவ திருமண வாழ்வில் முக்கிய இடத்தையும் வகிக்கின்றது. திருமணப் பிரமாணிக்கம் என்பது கணவனும் மனைவி யும் சிறப்பு மிக்க அன்பினுற் பிணைக்கப்பட்டவர்கள் என்று அர்த்தமாம். விபசாரிகள் ஒருவருக்கொருவர் அன்பு செய்வது போல் இவர்கள் அன்பு செய்யப்படாது. கிறிஸ்து அன்பு செய்தது போலவே அன்பு செய்ய வேண்டும். இதுவே புனித சின்னப்பரின் கட்டளையுங் கூட, ''கணவர்களே கிறிஸ்து திருச்சபைக்கு அன்பு செய்தது போல நீங்களும் அன்பு செய்யுங்கள்.'' (எபே. 5 : 25) நிச்சயமாகவே கிறிஸ்து திருச்சபையை எல்லை மீறிய வகையில் அன்பு செய்தார். ஆயினும் தமது சொந்த நலனுக்காக அன்று. ஆனல் தமது பத் தினியாகிய திருச்சபையின் நலனுக்காகவேயாம். கணத் தில் மறைந்து விடும் ஆசையிலோ அல்லது உடல் இன் பத்திலோ அந்த அன்பு எழுப்பப்படவில்லை. காற்ருேடு காற்ருய் மாறும் வார்த்தைகளோடு இந்த அன்பு நிற்ப தில்லை. அது இதய ஆழத்தில் இருந்து சுரந்து எழும் அன்பாம். உண்மை அன்பு செயலிற் பிரதிபலிப்பது போல இந்த அன்பும் செயல் வடிவம் எடுத்து நிற்கும். இந்த அன்பு கணவன் மனைவியரின் ஆன்ம வாழ்வை வளம் பெறச் செய்வதையும் முழுமைப் படுத்துவதை யும் உயரிய நோக்கமாய்க் கொள்ள வேண்டும். அவர்

களின் கூட்டு வாழ்வு அறச் செயல்களைச் செய்வதற்கும் இறைவனையும் அயலவனையும் நேசிப்பதற்கும் உ த வி புரியும். இந்த அன்பிலேயே முழுச்சட்டமும் இறைவாக்கு உபதேசங்களும் அடங்கியிருக்கின்றன. (Casti Conubii n 23)

திருமண அன்பைப் பிரித்துக் காட்டும் சில சிறப்பு அம்சங்களையும் அடையாளங்களையும் இங்கு எடுத்துக் கூறுதல் பயனுள்ளதாகும். முதலாவது, "இந்த அன்பு ஓர் ஆளிடமிருந்து மற்றோர் ஆ ளு க் கு உள்ளத்திலிருந்து எழும் பாசத்தாற் காட்டப்படுவதால் மிகவும் **மனிதத் தன்மை** வாய்ந்தது. இவ்வன்பு முழு ஆளின் நன்மையையும் கருத்திற் கொண்டிருப்பதால் அதைப் பலப்டுத்தும் உடல், ஆன்ம செயல்களுக்கு ஒரு தனிப்பட்ட மாண்பைத் தருகிறது. ........இத்தகைய அன்பு மனித அம்சங்களையும் தெய்வீக அம்சங்களையும் ஒன்றிக்கச் செய்து, மணமக்கள் பாசமிக்க அன்பிலும், செயலிலும் ஒருவர் ஒருவருக்குச் சுதந்திரமாகத் தம்மையே கையளிக்க அவர்களை இட்டுச் செல்கிறது" (G. S. n. 49 )

"அடுத்தபடியாக, இ வ் வ ன் பு **முழுமையானது,** அதாவது அது கணவனுக்கும் மனைவிக்குமிடையே நிலவும் ஒரு சிறப்பான நட்புறவு. இ த ன் காரணமாக அவர்கள் எவ்வித கட்டுப்பாடோ அல்லது சுயநலப் பற்றோ இன்றி யாவற்றையும் தங்களுக்குள் உ தா ர குணத்துடன் பகிர்ந்து கொ ள் கி றா ர் க ள். தனது வாழ்க்கைத் துணைவரை உண்மையாக அன்பு செய்யும் எவரும் அவரிடமிருந்து பெ று ம் கொடைகளுக்காக மாத்திரமன்று, அவருக்காகவே அவரை அன்பு செய்கின்றனர். அதே வேளையில் தன்னை அவருக்கு முற்றாக அளித்து அவரை வளம் பெறச் செய்வதில் இன்பமடைகின்றார். ("Humanae Vitae" n. 9)

''இந்த அன்பு அவர்கள் வாழ்கை முழுவதிலுமே பரவி இருக்கின்றது. மேலும் அது தாராளமாக இயங்குவதால், வளர்ந்து நிறைவு பெறுகின்றது. ...... இந்த அன்பு திருமணத்திற்கே உரிய செயலிற் சிறப்பான முறையில் வெளிப்படுத்தப்பட்டு, நிறைவு பெறுகின்றது ஆகையால், மணமக்களைத் தூய்மையான முறையில் நெருங்கி ஒன்றிக்கச் செய்யும் செயல்கள் நேர்மையானவை, மாண்பு பெற்றவை. உண்மையில் மனித இயல்புக்குரிய முறையில் இச் செயல்கள் நடைபெறும் பொழுது, இவைகள் மணமக்கள் ஒருவர் மற்றொருவருக்கு மகிழ்ச்சியோடும் நன்றி உணர்ச்சியோடும் தங்களையே கொடையாக அளிப்பதைக் குறித்து காட்டுவதுடன், அக்கொடையைப் பேணி வளர்க்கவும் செய்கின்றன.'' (G. S. n. 49)

அடுத்ததாக, திருமண அன்பு மரண பரியந்தம் **பிரமாணிக்கமும் தனித்துவமும்** உடையதாகும் (Humanae Vitae n. 9). ''இந்த அன்பு ஒருவருக்கு ஒருவர் அளிக்கும் வாக்குறுதியால் முத்திரையிடப்பட்டது ; எல்லாவற்றிற்கும் மேலாகக் கிறிஸ்துவின் திருவருட்சாதனத்தாற் புனிதப்படுத்தப்பட்டது; இன்பத்திலும் துன்பத்திலும், உடலாலும் உள்ளத்தாலும் தவறக் கூடாத முறையில் பிரமாணிக்கம் கொண்டது ; ஆகையால், அது எல்லா வித விபசாரத்தையும், மணமுறிவையும் புறம்பாக்குகிறது. ஆண் பெண் ஆகியோர் ஒருவர் ஒருவர் பாற் கொண்டுள்ள முழு அன்பில் இருந்து கண்டு கொள்ளப்பட வேண்டிய அவர்களின் தனி மாண்பில் ஆண்டவரால் உறுதிப்படுத்தப் பெற்ற திருமணத்தின் ஒற்றுமை தெளிவாகக் காணக்கிடக்கின்றது'' (G. S. n. 49

''கடைசியாக, இந்த அன்பு **பயனளிக்கும் அன்பாகும்**. ஏனெனில், அது கணவன் மனைவியரின் உறவோடு முடிந்து விடாது, புதிதாகத் தோன்றும் உயிர்களில்

நீடித்திருப்பதையே இலக்காகக் கொண்டுள்ளது. திருமணமும் திருமண அன்பும் தம் இயல்பிலே பிள்ளைகளைப் பெற்று வளர்ப்பதற்கென்றே அமைக்கப்பட்டுள்ளன. உண்மையிலே குழந்தைகள் திருமணத்தின் மிகச் சிறந்த கொடைகளாக இருப்பதுடன், பெற்றோரின் நலனுக்கும் அவை பெரிதும் உதவுகின்றன'' (G S 50).

ஆகையால், கணவனும் மனைவியும் பொறுப்பு வாய்ந்த பெற்றோராய்ப் பணிபுரிய வேண்டுமெனத் திருமணஅன்பு வலியுறுத்துகிறது. (Humanae Vitae n. 9. 10)

கிறிஸ்தவ தம்பதிகள் தங்கள் திருமண உரிமைகளைப் பயன்படுத்தும் போது திருச்சபை விளக்கிக் கூறும் இறைச் சட்டத்தைக் கடைப் பிடிக்க வேண்டும். ''பிள்ளைகளின் பிறப்புகளை இடைவெளிப் படுத்த இறைவனாலேயே அமைக்கப் பெற்ற இயல்பு முறை ஒழுங்குகளும், கருவுறுதலுக்குரிய ஒழுங்குகளும் உண்டு. எனினும் இயற்கைச் சட்டத்திற்கு விளக்கம் கூறும் திருச்சபையின் தொடர்பான படிப்பினையின்படி, ஒவ்வொரு திருமணச் செயலும் புது உயிரை உருவாக்கக் கூடிய முறையில் அமைந்திருக்க வேண்டும்''. (Humanae Vitae n. 11) ஆகவே, ''தம்பதிகள் தங்கள் திருமண உரிமைகளைத் தகுந்த, இயல்பான முறையிற் பயன்படுத்தினால் இயற்கைக் காரணங்களின் நிமித்தமோ அல்லது சில குறைபாடுகளின் நிமித்தமோ புது உயிர்கள் உருவாகாது போனால் அவர்கள் இயற்கைக்கு மாறாக நடந்து கொள்கிறார்கள் என்று அவர்கள் மேற் குற்றஞ் சுமத்த முடியாது'' (Casti Connubii n. 57).

ஈற்றில் அன்பின் பந்தனத்தால் முத்திரையிடப் பட்ட குடும்பத்தில் மிளிர வேண்டியது ஒன்று உண்டு அதுவே புனித அகுஸ்தீனார் குறிப்பிடும் ''அன்பின் ஒழுங்கு'' அதாவது, மனைவி மீதும் பிள்ளைகள் மீதும் கணவனே தலைமைத் தானத்தைப் பெற வேண்டியவன்,

புனித சின்னப்பரின் கட்டளைப்படி ''மனைவியரே ஆண்டவருக்குப் பணிந்திருப்பது போல உங்கள் கணவர்க்குப் பணிந்திருங்கள், ஏனெனில், கிறிஸ்து திருச்சபைக்குத் தலையாய் இருப்பது போலக் கணவன் மனைவிக்குத் தலையாய் இருக்கிறான். கிறிஸ்து திருச்சபையாகிய தம் உடலின் மீட்பர். அந்தத் திருச்சபை கிறிஸ்துவுக்குப் பணிந்திருப்பது போல மனைவியரும் கணவர்க்கு அனைத்திலும் பணிந்திருத்தல் வேண்டும்'' (எபே. 5, 22.24) (Casti COnnubii n. 26).

*13*-ம் சிங்கராயர் பாப்பிறையின் விளக்கவுரைப்படி கணவன் குடும்பத்தை ஆளுபவனும் மனைவியின் தலைவனுமாம். மனைவியோ அவனுடைய சதையின் சதையும் எலும்பின் எலும்புமானவளாகையால் அவனுக்குப் பணிந்து அமைந்து நடப்பாள். இவ்வாறு பணிவு காட்டும் அதே வேளை அவனுக்குச் சங்கை மரியாதை செலுத்தத் தவற மாட்டாள். எனினும், "கட்டளை கொடுக்கும் கணவனும் பணிந்து நடக்கும் மனைவியும் இறை அன்பை அளவு கோலாகக் கொண்டே தத்தம் கடமைகளை அளக்க வேண்டும்; ஏனெனில், அவர்கள் இருவரும் இறைவனுடையவும், திருச்சபையுடையவும் சாயலைப் பெற்றிருப்பதாலேயாம்'' (Arcanum Divinae)

## III திருவருட் சாதனம்

கிறிஸ்தவ திருமணக் கொடைகளின் சிகரமும், கொடுமுடியுமென விளங்குவது அது திருஅருட் சாதனங்களில் ஒன்றாக இருப்பதே. கிறிஸ்தவ திருமணம் ஒரு திருவருட் சாதனம் எனும் போது, அது உடைபடாத பந்தனம் என்றும், அருளுயிரை வழங்கும் ஒரு புனித அடையாளம் என்னும் உயர்ந்த நிலைக்குக் கிறிஸ்து அதை உயர்த்தியுள்ளார் என்றும் 11ஆம் பத்திநாதர் விளக்குகிறார். (Casti Connubii n. 31).

''இறைவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும்'' (மத். 19. 6.) என்ற வார்த்தைகளாலும் ''தன் மனைவியை விலக்கிவிட்டு வேறு ஒருத்தியை மணப்பவன் விபசாரஞ் செய்கிறான். தன் கணவனால் விலக்கப்பட்டவளை மணப்பவனும் விபசாரம் செய்கிறான்''. (லூக். 16-18) என்னும் வார்த்தைகளாலும் மெய்விவாக உடன்படிக்கை முறிவு படாதது என்று யேசு அழுத்தந்திருத்தமாய்ப் போதித்தார். (Casti Connubii n. 32).

சட்டத்தின்படி செய்யப்பட்டுப் பூர்த்தியாக்கப்பட்ட கிறிஸ்தவ திருமணக்கட்டு மரணத்தாலன்றி அவிழ்க்கப்படாத ஒன்றாகும். மேற்படி இறைக் கட்டளையின் உள்ளார்ந்த காரணம் என்ன என்று உன்னிப்பாக விசாரித்தால், கிறிஸ்தவ விவாக அந்தஸ்தின் மறை பொருளிலேயே அது இருக்கக் காணலாம். முற்றாகப் பூர்த்தியாக்கப்பட்ட விவாக பந்தமானது கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் இடையில் நிலவும் பிரிக்க முடியாத ஒன்றிப்பின் அடையாளமாகும். எபேசியருக்கு எழுதிய நிருபத்தில் புனித சின்னப்பர், கிறிஸ்தவ விவாக பந்தனமானது கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் இடையில் நிலவும் மிக நெருங்கிய ஒன்றிப்பைக் குறிக்கின்றது என்கிறார். ''இதில் அடங்கியுள்ள மறையுண்மை பெரிது. திருச்சபைக்கும் கிறிஸ்துவுக்கும் பொருந்தும் என்று நான் சொல்லுகிறேன்'' (எபே. 5. 32) கிறிஸ்து உயிர் வாழும் வரை, திருச்சபையும் அவரில் நிலைத்திருக்கும் வரை, இந்த ஒன்றிப்பும் நிலவும்; பிளவுபடாது முறிவு படாது. புனித அகுஸ்தினார் போதித்ததும் இதுவே: ''இதையே கிறிஸ்துவிலும் திருச்சபையிலும் காண்கின்றோம். ஆகவே விவாகமானவர்கள் விவாக ரத்துச் செய்து தங்கள் மணவாழ்வைப் பாழ் படுத்த வொண்ணாது. நமது இறைவனின் நகரில், அதாவது திருச்சபையில், இந்த அருட்சாதனம் அவ்வளவு மேலாக மதிக்கப்படுவதால் மகப் பேற்றுக்காக ஒருத்தியை விவா

கம் செய்திருந்தாலும் மனைவி மலடியானாற் சந்தானத்திற்காக வேறு ஒருத்தியை விவாகம் செய்வது சட்ட விரோதம் ஆகும்.'' (Casti Connubii n 35)

கிறிஸ்தவர்களின் விவாக பந்தனம் விபசாரத்தினாலோ பதிதத்தினாலோ, குண வேறுபாட்டினாலோ அல்லது கைவிடுவதினாலோ பிரிக்கப்பட மாட்டாது. (Council of Trent Sess 24).

கட்டவிழாமையினால் வரும் நன்மைகள் அளப்பரியவை. ''முதலாவதாக, தங்கள் திருமணம் நீடித்த உறுதிப்பாடுடையது என்னும் உத்தரவாதத்தைக் கணவன் மனைவியர் பெறுகின்றனர். உண்மை அன்புக்கு என்றும் முடிவு இராது'' (கொரி. 13. 8). பெருந்தன்மையோடு ஒருவரை ஒருவருக்குக் கையளித்தலும் மனப்பூர்வமாக ஒருவர் ஒருவருக்குச் செய்யும் அன்பும் இயல்பாகவே இத்தகைய உத்தரவாதத்தை எதிர்பார்க்கின்றது. அகத்திருந்தோ புறத்திருந்தோ கற்புடைமைக்கு எதிராக எழும் சோதனைகளுக்கு அது ஓர் அரண் போல் விளங்குகின்றது. இவ்வுத்தரவாதம் வயோதிபத்திலும் துன்ப காலங்களிலுங் கைவிடப்படக்கூடும் என்ற அச்சத்தை நீக்கி, ஒருவிதமான அமைதியையும் பாதுகாப்புணர்வையுந் தருகின்றது. ஒவ்வொருவரின் கௌரவத்தை விழிப்புணர்வுடன் பேணுவதுமன்றி, ஆபத்து வேளையில் ஒருவர் மற்றவருக்கு உதவுவார் என்ற நம்பிக்கையையும் அளிக்கின்றது, மரணம் மாத்திரமே அழிக்கக் கூடிய திருமண ஒப்பந்தத்தால் அவர்கள் ஒன்றித்திருப்பது, தோன்றி மறையும் நிலையற்ற பொருள்களுக்காகவோ அல்லது அற்ப ஆசைகளை நிறைவு செய்வதற்காகவோ அன்றி, ஒவ்வொருவரின் மேலான நித்திய நன்மைகளை அடைவதற்காகவே என்று அது அவர்களுக்கு நினைவூட்டும். பிள்ளை வளர்ப்பு, கல்வி புகட்டல் போன்ற பல வருடங்களாகச் செய்ய வேண்டிய பணியை ஆற்றுவ

தற்குத் தலை சிறந்த வசதி அளிக்கப்படுகிறது. இப்பணி மிகப் பழுவானதும் நீண்டகாலப் பொறுப்புடையதும் என்ற வகையில், பெற்றோரின் ஒருங்கிணைந்த முயற்சி அதை இலகுவாக்குகின்றது. கிறிஸ்தவத் திருமணத்தின் முறிவுபடாமையாற் போதுமான நன்மைகளை முழுச்சமுதாயமும் பெறுகின்றது. நேர்மை வாழ்வுக்கும் ஒழுக்க சீலத்துக்கும் மூல காரணம், திருமணங்களின் முறிவுபடாமையே என்று அனுபவ வாயிலாக அறிகின்றோம்.'' (Casti Connubii n – 36)

திருமணமானது நீடித்து இருக்கும் ஒரு தாபனம் மாத்திரமன்று, அருளுயிரை உற்பத்தி செய்யும் சாதனமும் ஆகும். எங்கள் ஆண்டவர் யேசுக்கிறிஸ்து, கிறிஸ்தவர்களின் விவாக ஒப்பந்தத்தை ஓர் அருட்சாதனத்தின் உன்னத நிலைக்கு உயர்த்தியுள்ளார். அதாவது, புதிய ஏற்பாட்டின் அருட்சாதனங்களுள் ஒன்றாக, சிறப்பான அருள் வாழ்வை வழங்கும் ஓர் அடையாளமாக உயர்த்தியுள்ளார். இதனால் சாதாரண திருமண அன்பு சிறப்படைகிறது. அதன் பிளவுபடாத ஒருமைப்பாடு உறுதி அடைகிறது. திருமணமாகுந் தம்பதிகள் புனிதம் அடைகின்றனர். (Council of Trent s – 24) ''விசுவாசிகளின் திருமண ஒப்பந்தம் அருளின் அடையாளமாகிறபடியால் அதன் உட்பொருள் விவாக அந்தஸ்தோடு நெருங்கிய தொடர்புடையதாகின்றது, ஆகவே, திருமுழுக்குப் பெற்றவர்களிடையே திருஅருட்சாதனம் இல்லாமல் உண்மையான திருமணமில்லை.

கிறிஸ்தவ விசுவாசிகள் கள்ளங்கபடற்ற இதயத்தோடு திருமணச் சம்மதத்தைத் தெரிவிக்கும் போது அருட்பிரசாதம் என்னுந் தடாகத்தைத் தங்கள் மேல் மடை திறந்து விடுகிறார்கள். இதிலிருந்து தங்கள் வேலைகளையும், கடமைகளையும் பிரமாணிக்கமாகவும், புனிதமாகவும், மரணபரியந்தம் விடாப்பிடியாகவும் செய்வதற்குச் சுபாவத்திற்கு மேலான தைரியத்தைப்

பெறுகின்றார்கள். ஏனெனில், விக்கினம் எதுவும் அதன் பலாபலன்களைத் தடை செய்தாலன்றி, இத்திருவருட் சாதனம் கிறிஸ்தவ வாழ்வின் அத்திவாரமாகிய அருளு யிரை வளம் பெறச் செய்வதுமன்றி மேலதிக சிறப்புக் கொடைகளையும், நல்லுணர்வுகளையுங் கொடுக்கின்றது. மேலும், அது இயற்கை ஆற்றல்களை விசாலப்படுத்திப் பூர்த்தியாக்கி அதைப் பெற்றவர்கள் திருமண அந்தஸ் துக்குரிய நோக்கம், கடமை ஆகியவற்றை மனதாற் புரிந்து கொள்ள மாத்திரமன்றி உள்ளூர இனிது சுவைக்கவும், உறுதியாக ஏற்றுக் கொள்ளவும், திட்ட மாக விரும்பவும், செயலில் நிறைவேற்றவும் வரங் கொடுக்கின்றது. சமயாசமயங்களில் திருமணக் கடமை களைச் செவ்வனே செய்வதற்குத் தேவைப்படும் அருளு தவிகளைப் பெறுவதற்கு உரிமையும் அளிக்கின்றது- இறை அருளுக்குப் பணிந்த மனதோடு தங்களால் இயன்றதெல்லாம் திறம்படச் செய்வார்களாயின், தங் கள் அந்தஸ்தின் பழுவான கடமைகளைத் தாங்க இந்த அருட்சாதனத்திலிருந்து வலிமைகளைப் பெறுவார்கள். புனித அகுஸ்தீனுர் கூறுவதாவது : திருமுழுக்கினுல் அல்லது குருத்துவத்தால் ஒருவன் கிறிஸ்தவ வாழ்வு வாழ்வதற்கு அல்லது குருத்துவக் கடமைகளை நிறை வேற்றுவதற்கு அழைக்கப்படும் போது அந்தந்த அருட் சாதனத்தாற் குறிக்கப்படும் அருளுதவி ஒரு போதும் அவனுக்கு மறுக்கப்படுவதில்லை. அவ்வாறே திருமண பந்தத்தாற் பிணைக்கப்படும் கிறிஸ்தவ விசுவாசிகளும் அதற்குரிய அருளுதவியைப் பெறத் தவற மாட்டார் கள். திருமணக்கட்டும் அவிழ்க்கப்பட முடியாது. (De Nupt et Concup. L, I, c - 10)

கிறிஸ்தவ கணவன் மனைவியர் தங்களை விலங்கிடப் பட்டவர்களாகவோ அல்லது தடை விதிக்கப்பட்டவர் களாகவோ கருதலாகாது. மாருக, திருமண அருட்சாத னம் என்னும் பொற் சங்கிலியால் அணி செய்யப்பட் டவர்கள் எனவும், இறை உதவியோடு கூடிய வலிமை

பெற்றவர்கள் எனவும் கருத வேண்டும். எனவே அவர்களின் ஒன்றிப்பு, திருமணத்தின் உள்ளார்ந்த ஞானக் கருத்தளவில் மாத்திரமன்று, தங்கள் நடத்தையினுலும் மனப்போக்கினுலும் எக்காலமும் கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் இடையிலுள்ள உயிருள்ள ஒன்றிப்பின் சாயலாகத் திகழ வேண்டும். சந்தேகமின்றி இதுவே மதிப்புக்குரிய அன்பின் மறைபொருளாய் விளங்குகின்றது'' (Casti Connbii n 38 – 42). கத்தோலிக்கரும் கத்தோலிக்கர் அல்லாதாரும் விவாக ஒப்பந்தம் செய்து கொள்வதைத் திருச்சபை மிகக் கண்டிப்பாய் எதிர்க்கின்றது. காரணம், கத்தோலிக்கரின் விசுவாசத்திற்கும் பிள்ளைகளின் விசுவாசத்திற்கும் ஆபத்து விளையலாம் என்ற பயத்தினுலேயாம். அண்மைக் காலங்களில் நமது நாட்டிலுங் கூடக் கலப்பு மண எண்ணிக்கை வளர்ந்து கொண்டே போகிறது. பொதுப்படக் கூறுமிடத்து கலப்பு விவாகங்களைக் களைந்து விட எல்லாவித முயற்சிகளும் நமது கத்தோலிக்கர் எடுக்க வேண்டும். தவிர்க்க முடியாவிடின் கலப்பு விவாகஞ் செய்யும் தங்கள் பிள்ளைகள் விசுவாசத்தை இழக்காத வகையிற் பாதுகாக்கப்பட வேண்டும். அத்தோடு பிள்ளைகளும் ஞான முழுக்காட்டப் பெற்றுக் கத்தோலிக்க பிள்ளைகளாகப் பயிற்றப்படவும் வளர்க்கப்படவும் வேண்டும். (Casti Connubii n. 84 – 83) (Paul VI - Motu Proprio: Matrimonia mixta.)

## III கிறிஸ்தவ திருமணத்தினதும் குடும்ப வாழ்வினதும் புனரமைப்பு

கிறிஸ்தவ திருமணமும், குடும்ப வாழ்வும் முறைகேடான ஒன்றிப்பு, விபசாரம், மலடாக்குதல், கர்ப்பத் தடை முறைகள், கருச்சிதைவு, விவாகரத்து, பதிவு மணம், கைவிடுதல் போன்ற தீய சக்திகளால் தீவிர தாக்குதலுக்கு இலக்காய் இருக்கும் இக்காலத்தில்,

குடும்ப வாழ்வைப் புதிதாக அமைப்பதற்குக் காரசார மான பிரசாரந் தொடங்க வேண்டியது அவசியமாகி றது. இறையியல், தத்துவவியல் போன்ற துறைகளில் உள்ள ஒரு முதுமொழியின் படி ''ஒரு பொருள் சீர ழிந்து விடும் போது அதை ஆரம்ப அசல் நிலைக்குத் திருப்ப வேண்டுமாயின் அதைப் பற்றிய இறைத் திட் டத்தை உணர்ந்தே திருப்ப வேண்டும் என்பதாம் .....

அப்படியானல் திருமணத்தை அதன் பழைய அசல் நிலைக்குக் கொண்டு வர வேண்டுமாயின் அதைப் பற் றிய இறைத் திட்டத்தைக் குறித்து, நாம் சிந்தித்து அத்திட்டத்தின் பாதையில் நமது ஒழுக்க நெறிகளை அமைக்கப் பிரயத்தனம் எடுக்க வேண்டும். (Casti Connubii n. 100 – 101)

இத்தகைய புதுப்பித்தலுக்கு இடையூருக உள்ளது கட்டுக்கடங்காத இச்சைகளின் வீருகும். ''முதலில் தன்னை படைத்த இறைவனுக்கு அவருக்குரிய தாழ்மை யான வணக்கமும் வழிபாடும் செலுத்திஞலன்றி, மனி தன் தனது இச்சைகளின் கெடுபிடியை மடக்க முடி யாது. எனவே, திருமணம் என்னும் புனித பந்தனத் தால் இணைக்கப்படும் தம்பதிகள் இடையே அத்தியா வசியமாகக் காணப்பட வேண்டிய முதற் பண்பு உள் ளார்ந்த இறையன்பாம். இவ்வன்பு அவர்களின் முழு வாழ்விற் சுவறுவதுமன்றி மனதிலும் இதயத்திலும் இறைவனின் மகத்துவத்தைப் பற்றிய ஆழ்ந்த வணக் கத்தையும் நிறைத்து விடும். (Casti Connubii n · 101)

திருமணத்தையும் குடும்பத்தையும் பற்றிய இறை வனின் பிரமாணங்களைக் கடைப்பிடிப்பதாயின் அவை யாவை என்று சந்தேகமின்றித் தவறுதலுக்கு இடம் இல்லாத வகையில் இலகுவிற் கண்டடைய வேண்டும். ஆகவே, இறையன்பும் அவருக்குப் பணி செய்ய ஆவ லும் இருக்கிற அதே வேளையில், திருச்சபைக்கும் உண்

மையான பணிவான அமைச்சல் காட்டும் மனப்பான் மையும் இருக்க வேண்டும். ஏனெனில் ஒழுக்க நெறித் துறையில் அநேக விடயங்கள் பிறர் உதவியின்றி மனிதன் தானுக அறியக் கூடியதாயினும், இவற்றிலுங் கூட, அதாவது நல்லொழுக்கப் பாதையில் மாந்தரை நெறிப்படுத்தும் விடயங்களிற் கூட, உண்மையை எடுத்துரைக்கும் ஆசிரியையாகக் கிறிஸ்துவே திருச்சபையை ஏற்படுத்தியுள்ளார். ஆகவே, கிறிஸ்தவ விசுவாசிகள் தவறுகளிலும் ஒழுக்கக் கேடுகளிலும் இருந்து தங்களைக் காத்துக் கொள்ள வேண்டுமாயின் தாய்த் திருச்சபைக்குப் பணிந்து நடப்பார்களாக ..... (Casti Connubii n. 108 - 109)

உண்மைக் கிறிஸ்தவன், படிப்பறிவுள்ளவனும் சரி அற்றவனும் சரி விசுவாச, ஒழுக்க நெறி போன்ற விடயங்களில் திருச்சபையினுலே அதன் தலைமை ஆயர் ஆகிய பாப்பிறை மூலமாக வழி நடத்தப்படுவான். ஆயினும் திருமணத்தை இறைப் பிரமாணத்தோடு முற்றும் சரி ஒத்ததாக்கிப் புனரமைப்பதற்குத் திருச்சபைப் போதகம் எத்துணை உன்னதமாயினும், அது மாத்திரம் போதுமானதன்று. மணமாணவர்களுக்குத் திருமணத்தைப் பற்றிய அறிவுரைகள் போதியளவு போதிக்கப்பட்ட பின் அவர்கள் மேற்படி அறிவுரைகளையும் புனித ஒழுங்குகளையும் அனுசரிக்கத் திடசங்கற்பம் பூண்டவர்களாய் இருத்தல் அவசியம் ..... கணவன் மனைவியர் பின்வருந் காத்திரமான புனித தீர்மானங்களை நிறைவேற்றுவார்களாக ;

திருமணத்தைப் பற்றிய எல்லாக் காரியங்களிலுந் தங்கு தடையின்றி இறைச் சட்டத்தையே கைக்கொள்ளுவார்கள்;

பரஸ்பர அன்பால் எப்பொழுதும் ஒருவருக்கொருவர் உதவி புரிவார்கள்;

திருமணக் கற்பைப் பேணிக் காப்பார்கள்;

திருமண பந்தனத்தைச் சீர் குலையார்கள்.

தாம்பத்திய உரிமைகளை எப்போதும் மிதமாகவும் கிறிஸ்தவ மனப்பான்மையோடும், சிறப்பாக விவாக அந்தஸ்தின் தொடக்கக் காலத்தில் அனுபவிப்பார்கள்

மேற்கூறிய தீர்மானங்களைக் எடுத்து நிறைவேற்றும் போது, தாங்கள் பெற்றுக் கொண்ட திருவருட் சாதனம் அதன் அந்தஸ்துப் போன்றவைகளைப் பற்றியும் தியானிக்கும் போது, கிறிஸ்தவ கணவன் மனைவியர் வலிமை மிக்க இறை உதவியும் பெறுகிறார்கள். தங்கள் குடும்பக் கடமைகளைச் செய்வதற்கும் பதவிகளை வகிப்பதற்கும் தாங்கள் உறுதியளிக்கப்பட்டு அர்ப்பணிக்கப்பட்டவர்கள் என்பதை அவர்கள் எக்காலமும் மனதில் வைத்திருக்கட்டும்; மெய்விவாகம் என்னும் திருவருட் சாதனத்தால் அழியாத முத்திரை பதிக்கப் படாவிடினும், அதன் பலாபலனாகிய அர்ப்பண வாழ்வு காலகாலமாக நிலைத்திருக்கும்.

ஆயினும் இவ்வருட் சாதனத்தால் வழங்கப்படும் அருளின் முழுப்பலாபலனை அநுபவிக்க வேண்டுமாயின் கணவன் மனைவியர் அதனோடு ஒத்துழைக்க வேண்டும். அந்த ஒத்துழைப்பு தங்கள் பொறுப்புக்களை மிக்க பிரமாணிக்கத்தோடு நிறைவேற்றுவதில் அடங்கும் இயற்கை வரிசையில் இறைவன் நமக்கு வழங்குந் திடம் நமது முயற்சியாலும் சுறுசுறுப்பாலும் வளர்ச்சி அடைகிறது. உழைப்பும் சுறுசுறுப்பும் இல்லாதொழியின் அதுவுந் தேய்ந்து விடும். அவ்வாறே திருவருட் சாதனத்தால் அளிக்கப்படும் வரப்பிரசாத ஆற்றலை அதைப் பெறுபவரின் சொந்த உற்சாகத்தாலும் பயிற்சியாலும் வளம் பெறச் செய்தல் வேண்டும். தங்களிடத்திலுள்ள அந்த வரப்பிரசாத ஆற்றலை அவர்கள் அவட்சியம் செய்யாதிருக்கட்டும். தங்கள் கடமைகள் எவ்வளவு கடினமானவையாயிருப்பினும் உற்சாகத்துடன் அவற்றைச் செய்வதிற் கண்ணுங் கருத்துமாய் இருப்பார்களாக. இவ்

வாறு இறை அருளின் ஆற்றல் நாளிலும் பொழுதிலும் வளர்வதை அவர்கள் அறிவார்கள்'' (Casti Connubii n. 115 - 117).

ஆறும் சின்னப்பர் பாப்பிறையின் அருளுரையின் படி மணமாகுந் தம்பதிகள் தங்கள் கஷ்டங்களைத் துணிவுடன் எதிர்நோக்குவார்களாக. அவர்களின் இந்தப் பிரயாசையில் விசுவாசம், நம்பிக்கை துணை நிற்கும். நம்பிக்கையோ பொய்க்காது. ஏனெனில் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியின் வழியாக கடவுளின் அன்பு நமது உள்ளங்களிற் பொழியப்பட்டுள்ளது (உரோ. 5 - 5). விடாப்பிடியான செபத்தால் இறை உதவியை இறைஞ்சுவார்களாக. எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனுக்கும் அன்பிற்கும் ஊற்றாகிய தேவநற்கருணையில் இருந்து அள்ளிப் பருகுவார்களாக. பாவத்தின் கோரப் பிடியில் அவர்கள் அகப்பட்டிருப்பினுங் கூடத் தைரியம் இழக்காதிருப்பார்களாக. இரக்கத்தின் ஆசனம் ஆகிய பச்சாத்தாபம் என்னும் திருவருட்சாதனத்தில் விடா முயற்சியுடன் தஞ்சம் புகுவார்களாக. அதனூடாகவே இறையிரக்கம் பொழியப்படுகிறது. இத்தன்மையாகவே மணவாழ்வின் முழு வாழ்வைப் பெற ஆற்றல் அடைவார்கள். (Humanae Vitae n. 25) (Refer also : Casti Connubii n. 105).

## IV கிறிஸ்தவ குடும்பம் திருச்சபையிலும், இன்றைய உலகிலும் ஆற்ற வேண்டிய பணி

கிறிஸ்தவ குடும்பத்தின் ஒரே அலுவல் அல்லது பணி கிறிஸ்துவை அறிவித்தலே எனத் திருத்தந்தை 6-வது சின்னப்பர் கூறுகிறார். மனுக்குலத்தின் பல்வேறு நிலையினர்க்கும் நற்செய்தியை அறிவித்தலும், தனது செல்வாக்கினால் மனித இனத்தை உருமாற்றி, புதுப்பித்தலுமே கிறித்தவ குடும்பத்தின் பணியாகும். (Evangelii Nuntiandi n. 18)

## 1. திருச்சபையில் கிறிஸ்தவ குடும்பத்தின் பணி

திருச்சபையிற் கிறிஸ்தவ குடும்பம் ஆற்றும் பணியை இரண்டு தலைப்புக்களில் வகுக்கலாம்.

(அ) உட்பணி (ஆ) புறப்பணி

### அ. உட்பணி அல்லது திருச்சபை சார்ந்த உறுப்பினர்க்கு ஆற்றும் பணி

#### 1. கிறிஸ்தவ குடும்பத்தின் கல்விப் பணி.

''பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு உயிர் அளிக்கிறார்கள் என்பதால் அவர்களுக்கு கல்வி அளிக்க வேண்டியது அவர்களது தலையான கடமை. எனவே அவர்களே குழந்தைகளுக்கு முதன்மையான, முக்கியமான ஆசிரியர்கள் என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். கல்விப் பணி எவ்வளவு முக்கியமானதென்றால், இது நிறைவேற்றப்படாதிருக்கும் இடத்தில் வேறெதுவும் கொண்டு இதனை நிறைவு செய்வது மிகவும் கடினம். கடவுளுக்கும், மனிதருக்கும் காட்டும் அன்பாலும் பற்றாலும் உயிரூட்டப் பெற்றுள்ள குடும்பச் சூழ்நிலையை உருவாக்குதல் பெற்றோர்களுடைய கடமையாகும். இதனால் குழந்தைகளின் தனி, சமூகக் கல்வியைக் குறையற நிறைவு செய்ய முடியும். குறிப்பாக, திருமணம் என்ற திருவருட் சாதனத்தின் அருளாலும் கடமையாலும் வளம் பெற்றுள்ள கிறிஸ்தவக் குடும்பத்தில் திருமுழுக்கால் அவர்கள் பெற்ற விசுவாசத்துக்குத் தக்கபடி கடவுளைக் கண்டுணரவும், அவரை வழிபடவும், பிறருக்கு அன்பு செய்யவும் பிள்ளைகள் குழந்தைப் பருவத்திலிருந்தே கற்பிக்கப்பட வேண்டும்''.

(2ஆம் வத்திக்கான் சங்கம் : கிறிஸ்தவக் கல்வி இல. 3 )

உயிருள்ள விசுவாசம் நிலை பெறச் சமூகத்தின் உதவி வேண்டப்படுகிறது. எனவே, தம் பிள்ளைகளை பங்கு முயற்சிகளில் ஈடுபடுத்தும் பொறுப்பு பெற்றோர்க் குரியது. அவர்களது கல்வி வளர்ச்சிக்கும் ஆழ்ந்த விசுவாசத்துக்கும் தேவையான பயனுள்ள வேறு சமூக நிறுவனங்களிலும் ஈடுபாடுள்ளவர்களாகப் பிள்ளைகளை வளர்க்க வேண்டும். (இன்றைய உலகில் கிறிஸ்தவ குடும்பத்தின் பணி ப. 32)

சமூக வாழ்வில் அண்மையில் ஏற்பட்டுள்ள மாறுதல்களினால் கல்விப் பணியில் மேலும் சிரமங்களைக் குடும்பம் எதிர் நோக்க வேண்டுயுள்ளது. கல்வி நிறுவனங்கள் தன்னுளுமையும் மனிதப் பண்பும், கிறிஸ்தவ உருவாக்கமும் கொண்ட நற்கல்வியை தனி ஆளுக்கு ஊட்டக்கூடிய நிலையில் இல்லை. எனவே, பாடசாலை வழங்க முடியாததை வழங்க வேண்டிய பொறுப்பு குடும்பத்தைச் சார்கிறது. மறைக்கல்வி ஊட்டலில் குடும்பத்தின் பங்கு அதிகமாகிறது. பச்சாத்தாபம், திருவிருந்து, உறுதிபூசுதல், எனும் திருவருட்சாதனங்களுக்கான ஆயத்தங்களில் பெற்றோரும் ஒன்று சேர வேண்டுமென்ற புதிய பரீட்சார்த்த முறைகள் பெற்றோரின் கடமைகளை இன்னும் அதிகமாக்குகின்றன. பள்ளிக்கு முந்திய பருவத்தில் சிறப்பான மறைக் கல்வியை பெற்றோர் கொடுக்க வேண்டியவர்களாயிருக்கின்றனர். கல்விப் பணியில் பெற்றோர் தம் பிள்ளைகளின் உதவியையும் சேர்க்க வேண்டியது அவசியம்.

(Role of the Christian Family P, 33-34)

திருத்தந்தை 2-ம் அருள் சின்னப்பர் அண்மையில் கல்வி பற்றிக் குறிப்பிட்டுள்ள கருத்து நோக்கற்பாலது. இளைஞர்க்கான கல்வியின் நோக்கம் அவர்களின் உருவாக்கலில் உதவுதலும், கிறிஸ்தவ கண்ணோக்குடன் பல்வேறுபட்ட பிரச்சனைகளை எதிர் கொள்ளச் செய்தலுமாகும். இவை மட்டில் அக்கறை இல்லாத அல்

லது பகைமையுடைய உலக போக்கை மாற்றிச் சமுதாயத்துக்குப் பணி செய்பவர்களாகவும், விசுவாசமுள்ளவர்களாகவும் அவர்களை ஆக்க வேண்டும். பெற்றோருடன் ஒன்றித்து திருச்சபையின் வாழ்வில் ஊக்கமுடன் பங்கு கொள்ளச் செய்தல் நம் கடமையாகும்,

(Role of the Christan Family P. 34)

## 2. கிறிஸ்தவ குடும்பத்தின் புனிதப்படுத்தும் பணி

"கிறிஸ்தவ மணமக்கள் தங்களின் நிலமையிலிருந்து எழும் கடமைகளுக்கும் மதிப்பிற்கும் ஏற்றவாறு வாழ தனிப்பட்டதொரு அருட்சாதனத்தின் வழியாக வலுப்பெறுகின்றனர்; ஒரு வகையில் திருநிலைப்படுத்தப்படுகின்றனர். இந்தத் திருவருட் சாதனத்தின் ஆற்றலால் தங்களின் திருமண, குடும்பக் கடமைகளை நிறைவேற்றிக் கொண்டு விசுவாசம், நம்பிக்கை, பரம அன்பு ஆகியவற்றால் தங்களின் வாழ்வு முழுவதையும் நிறைத்து நிற்கும் கிறிஸ்துவின் மனநிலையில் ஊறித் திளைத்தவர்களாய் அவர்கள் அதிகமதிகமாக, தங்களை நிறைவுடையவர் ஆக்குவதோடு ஒருவரொருவரையும் புனிதப்படுத்துகிறார்கள். இவ்வாறு அவர்கள் சேர்ந்து கடவுளை மாட்சிப்படுத்துகிறார்கள்.

இப்படியாக குடும்பச் செபத்தாலும் முன்மாதிரியாலும் பெற்றோர்கள் வழிகாட்டிச் செல்ல, பிள்ளைகளும் குடும்பத்தோடு ஒன்று சேர்ந்து வாழும் எல்லோருமே மனிதத்தன்மை, மீட்பு, புனிதத்தன்மையின் வழியை மிக எளிதாகக் கண்டு பிடிப்பார்கள். மணமக்கள் தாயாகவும் தந்தையாகவும் இருக்கும் மேன்மையையும் பணியையும் கொண்டிருப்பதால், முதன் முதல் அவர்களைச் சார்ந்த கல்வி ஊட்டும் கடமையை, முக்கியமாக மறைக்கல்வி புகட்டும் கடமையை கருத்துடன் நிறைவேற்றுவார்களாக.

குடும்பத்தின் உயிருள்ள உறுப்பினர்கள் என்ற என்ற முறையில் குழந்தைகள் தங்கள் பெற்றோர் புனிதமடையத் தங்களுக்குரிய வகையில் உதவுகிறார்கள். நன்றி உள்ளத்துடனும் அன்புடனும் நம்பிக்கையுடனும் குழந்தைகள் தங்கள் பெற்றோருக்கு கைமாறு புரிவர்.'' (இன்றைய உலகில் திருச்சபை இல. 48) (சங்க ஏடு: திருச்சபை இல. 41 ஐயும் 25 ஐயும் Casti Connubii n. 38-42 ஐயும் பார்க்கவும்)

''திருமணத்தின் வழியாக, வாக்களிக்கப்பட்ட ஆவியின் அருள் குடும்பத்தில் இருக்குமிடத்து கணவன் மனைவியர், பெற்றோர், பிள்ளைகள், சகோதரர் மத்தியில் அருளால் ஊக்குவிக்கப்பட்ட பலதுறைகளிலும், இறை அன்பைப் புலப்படுத்தும், திருச்சபையின் செப வாழ்வுக்கு இட்டுச் செல்லப்படுவர்'' (Role of the Christian Family P. 31)

### ஆ. கிறிஸ்தவ குடும்பம் ஆற்றும் புறப்பணி, அதாவது இறை மக்களுக்கு ஆற்றும் பணி

இறைவனது சொந்த மக்களின் வாழ்வுக்காகவும் வளர்ச்சிக்காகவும் கிறிஸ்தவ குடும்பம் செயற்பட வேண்டுமென்ற பெரிய உண்மையை பெற்றோர் உணர்தல் அவசியம். ''இந்தத் திருவருட் சாதனத்தின் வல்லமையால் தங்களது திருமண வாழ்விலும், பிள்ளைகளைப் பெற்றெடுப்பதிலும், வளர்த்து உருவாக்குவதிலும், புனிதமடைய ஒருவருக்கொருவர் உதவுகின்றனர், இதனால் தங்கள் வாழ்க்கை நிலையிலும், பதவியிலும் இறை மக்களுள் இவர்கள் தமக்குரிய நன்கொடையைப் பெற்றுக் கொள்கின்றனர். ஏனெனில் திருமண இணைப்பால் உருவாகிறது குடும்பம்; இக்குடும்பத்தில் தான் மனித சமுதாயத்தின் புதுக் குடிமக்கள் பிறக்கின்றனர். காலங்களின் முடிவு வரை இறை மக்கள் குலம் நிலைத்து நிற்பதற்காக இவர்கள் பரிசுத்த ஆவியின் அருளால் ஞானஸ்நானத்தின் மூலமாக இறைவனின் பிள்ளைகளாக்கபடுகின்றனர். ஒரு வகையில் இல்

லத் திருச்சபை என்று அழைக்கப் பெறக் கூடிய குடும்பத்தில் பெற்றோர் தமது சொல்லாலும் முன் மாதிரியாலும் தங்கள் பிள்ளைகளுக்கு முதன் முதலில் விசுவாசத்தைப் போதிப்பவர்களாக இருப்பார்களாக. இன்னும் ஒவ்வொரு பிள்ளைக்கும் உரித்தான அழைத்தலை அவர்கள் பேணிக்காக்க வேண்டும்.; தேவ அழைத்தலாக இருந்தால் அவர்கள் தனிப்பட்ட அக்கறையுடன் அதைப் பேணி வளர்க்க வேண்டும்.''

(திருச்சபை இல 11) (பொது நிலையினரின் அப்போஸ்தலத்துவம் இல 11 ஐயும் பார்க்கவும்)

தம் குடும்ப எல்லையைத் தாண்டி, உலகம் திருச்சபை ஆகிய சமூகங்களுக்குத் தம் உள்ளத்தைத் திறந்து வைக்குமாறு பிள்ளைகளைப் பயிற்றுவிக்க வேண்டும். இறைமக்களின் உயிருள்ள, செயற்படும் உறுப்பினராய் உள்ளனர் என்று உணரும் அளவுக்கு பங்கு எனும் சமூகத்தில் இவர்களும் ஏற்றுக் கொள்ளப்படுவார்களாக''

(பொது நிலை அப். இல. 30)

''குடும்ப வாழ்வில் கணவன் மனைவியர் ஒருவரொருவர் முன்னிலையிலும், தம் மக்கள் முன்னிலையிலும் கிறிஸ்துவின் அன்பிற்கும் அவர் மேலுள்ள விசுவாசத்திற்கும் சாட்சிகளாக நின்று தமக்கேயுரிய அழைத்தலுக்கேற்ப வாழ்கின்றனர். கிறிஸ்தவக் குடும்பம் இறையரசின் இன்றைய பண்புகளையும், வரவிருக்கும் இன்ப வாழ்வின் மேலுள்ள நம்பிக்கையையும் ஆணித்தரமாக எடுத்துரைக்கிறது''

(சங்க ஏடு: திருச்சபை இல. 35)

## 2. இன்றைய உலகில் கிறிஸ்தவ குடும்பத்தின் பணி.

''கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்குமிடையேயுள்ள அன்பு ஒப்பந்தத்தின் சாயலும், பங்கு கொள்ளலுமான

திருமணத்திலிருந்து, கிறிஸ்தவ குடும்பம் தோன்றுகின்றது. எனவே, மீட்பர் உயிருள்ள முறையில், நம்முடன் இருக்கின்றார் என்பதையும், திருச்சபையின் உண்மை இயல்பையும் மணமக்களின் அன்பினுலும் இனப்பெருக்க வளமையாலும், ஒற்றுமைப் பிரமாணிக்கத்தாலும் எல்லா உறுப்பினருடையவும் அன்புள்ள ஒத்துழைப்பாலும், கிறிஸ்தவக் கிடும்பம் வெளிப்படுத்துவதாக''. (இ. உ. தி. இல. 48) (Humanae Vitae n. 25 ஐயும் பார்க்க.

''திருமணப் பிணைப்பு தூய்மையானது, பிரிக்க முடியாதது எனத் தங்கள் வாழ்க்கையாலேயே வெளிப்படுத்தி எண்பிப்பதும், கிறிஸ்தவருக்கேற்ற முறையில் பிள்ளைகளை வளர்ப்பதும் பெற்றோர் அல்லது காப்பாளரின் உரிமையும் கடமையும் ஆகுமென வன்மையாய் வலியுறுத்துவதும், குடும்பத்தின் முறையான தன்னுட்சி உரிமையையும் மாண்பையும் பாதுகாப்பதும் மணமக்களின் கடமையாக என்றும் இருந்து வந்துள்ளது. இன்றோ இது அவர்களது அப்போஸ்தல பணியின் பெரும் பகுதியாக மாறிவிட்டது. அவர்களும், மற்ற கிறிஸ்தவ விசுவாசிகளும் நன்மனத்தோர் யாவரோடும் ஒத்துழைப்பார்களாக. இவ்வாறு இவ்வுரிமைகளை அரசியல் சட்டங்களும் பழுதின்றி பாதுகாக்கும் படி செய்யலாம். உறைவிடம், பிள்ளைகளின் வளர்ப்பு, உழைப்பின் நிலைமை, சமூகப் பாதுகாப்பு, வரிகள் ஆகிய குடும்பத் தேவைகளை, சமூகத்தை ஆளுவோர் கருத்தில் கொள்ளச் செய்யலாம். குடிபெயர்வோரைப் பற்றி ஒழுங்கு செய்யும் போது, அவர்களின் குடும்ப வாழ்க்கை முழுவதும் பாதுகாப்புடன் இருக்கச் செய்யலாம்.

சமுதாயத்தின் முதல் உயிரணுவாயிருக்க வேண்டும் என்ற இந்தப் பணியை இறைவனே குடும்பத்

திற்கு அளித்திருக்கிறார். குடும்ப உறுப்பினர் ஒருவருக் கொருவர் காட்டும் பற்றுலும், அவர்கள் ஒன்றாய்க் குழுமி கடவுள் பால் எழுப்பும் செபத்தாலும், திருச் சபையின் இல்லத் திருவிடமாய் இக்குடும்பம் விளங்கு வதாலும், திருச்சபையின் இறை பணியில் குடும்பம் முழுவதும் கலந்து கொள்வதாலும், இறுதியாக விருந் தோம்பும் குடும்பமாகத் தன்னையே காட்டுவதாலும், தேவையுறும் சகோதரர் அனைவரின் தேவைக்காக நீதி யையும், பிற நற்செயல்களையும், ஊக்குவிப்பதாலும் இப்பணியைக் குடும்பம் நிறைவேற்றும். குடும்ப அப் போஸ்தல பணியின் பல்வேறு வேலைகளுள் பின்வருவ னவற்றையும் குறிப்பிடலாம்: கைவிடப்பட்ட பிள்ளை களை எடுத்து வளர்த்தல், முன்பின் தெரியாதவருக்கு வாஞ்சையுடன் விருந்தோம்பல், பள்ளிகள் வைத்து நடத்தத் துணை புரிதல், இளைஞர்க்கு அறிவுரையும், பொருளுதவியும் வழங்கல், திருமணம் புரிய விருப்ப முள்ளவர்கள் சிறந்த முறையில் திருமணத்திற்குத் தங் களை தயார் செய்ய உதவுதல், மறைக்கல்வி புகட்டுதல், பொருளாதார அல்லது ஒழுக்கப் பிரச்சினைகளில் சிக்கி யிருக்கும் மணமக்களையும், குடும்பங்களையும் காப்பாற் றல் போன்றவை; முதியோர்களுக்கு வாழ்வின் தேவை களை நிறைவு செய்வதோடு மட்டுமல்லாது பொருளா தார முன்னேற்ற நலன்களிலே சீரான முறையில் பங்கு பெற உதவி செய்தல்...... தம் அப்போஸ்தலத்துவ குறிக்கோள்களை இன்னும் எளிதில் அடைய, குடும்பங் கள் ஒரு சில குழுக்களாகக் கூடி இணைந்து கொள்வது மிக நலமாக இருக்கும்.

(பொ. நி. அப். இல. 11) (இ. உ. தி. இல. 52 ஐயும் பார்க்கவும்.

''எனவே தெய்வீகச் சட்டத்திற்குப் பிரமாணிக்க மாய் இருக்க தம்பதியர் செய்யும் தாராள முயற்சி யின் பல விளைவுகளில் முக்கியமானதொன்றேதெனில் தங்களது அனுபவத்தில் பிறரும் பங்குபெற வேண்டும்

என்ற ஆர்வமாகும். இவ்விதமாகப் பொது நிலையினர்க்கே உரிய அழைப்பில், தமக்கொத்தவர்க்குப் பணி புரிதல் என்னும் புதியதும், சிறப்பானதுமான ஒருவகை அப்போஸ்தன பணி இடம் பெறுகிறது. தம்பதியரே பிற தம்பதியருக்கு அப்போஸ்தலர்களாகவும் வழிகாட்டிகளாகவும் அமைகின்றனர் எத்தனையோ வகையான அப்போஸ்தலப் பணிகளில் இது தற்காலத்திற்கு மிகவும் ஏற்றதாகத் தோன்றுகிறது''. (Humanae Vitae n. 26)

''ஈற்றில், மனிதனின் தூய்மையை அழிப்பதும் மனித மகத்துவத்திற்குத் தீங்கு விளைப்பதும், வெட்கத்திற்குரியதும், கீழ்த்தரமானதுமான, இன்றைய மனிதனின் வாழ்க்கை முறையிலும், நாட்டின் நிர்வாகத்திலும். காணப்படும் தீங்குகளைத் தீர்த்து வைக்கக் கூடிய ஒரோ வழிவகை — குடும்பங்கள் தங்கள் ஞான மேய்ப்பரின் ஏவுதல் மூலமும், வழி நடத்தல் மூலமும் தமது இராசரீக கடமைகளை விளங்கிச் செயல்படுவதேயாகும்'' (Role of the Christian Family p. 45). இது தேசிய ரீதியிலும் அனைத்துலக ரீதியிலும் இடம் பெற வேண்டும்.

## V. கிறிஸ்தவ திருமணம், கிறிஸ்தவ குடும்ப வாழ்வு, அப்போஸ்தலம் என்பதற்கு ஆயத்தம்

திருச்சபையிலும் உலகிலும் கிறிஸ்தவ குடும்பங்கள் ஆற்றும் பணி, மணமக்களுக்கு அளிக்கப்படும் தூர அல்லது நெருங்கிய திருமண ஆயத்தங்களிலேயே பெருமளவு தங்கியுள்ளது. திருத்தந்தை பதினோராம் பத்திநாதர் கூறுகின்றார்:

''உறுதியானதும் மகிழ்ச்சிகரமானதுமானஒரு குடும்ப வாழ்க்கை அல்லது சிதைவுகள் நிரம்பிய, கவலைகள் மலிந்த ஒரு துன்ப வாழ்க்கை — பிள்ளைப் பருவத்திலும் குமரப் பருவத்திலும் இடப்படும் அத்திவாரத்தைப் பொறுத்துளதென்பது எவரும் மறக்கமுடியாததொன்று. மணவாழ்வின் முன்னர் தன்னலத்துக்கும் உணர்ச்சிகட்கும் அடிமைகளாய் இருந்தோர் திருமணத்தின் பின்னரும் அதே குறைகளுடன் இருப்பர் என எண்ணுவது

சரியானதே. எனவே, இளைஞர்களும் யுவதிகளும் திரு மண வாழ்வின் சிலுவைகளைச் சுமப்பதில் ஒருங்கிணைந்த, ஒருவருக்கொருவர் உறுதுணையாய் விளங்கத்தக்க பயிற்சிகளைப் பெறுதல் அவசியம். அதன் மேலாக கிறிஸ்துவின் நிறைவில் ஆன்மீக வளம் பெற்று, முடிவற்ற வாழ்வை அடையும் வண்ணம் அவர்கள் வழிநடத்தப் படல் வேண்டும். இது சிறூர் மட்டில் ஈடுபாடுள்ள, இறைவிருப்புக்கமைந்த பெற்றோராக அவர்களை ஆக்கும்.'' கல்வி பற்றிய தமது சுற்றுமடலில் கூறப்பட்ட எச்சரிக்கையை நினைவூட்டுகிறார் திருத்தந்தை பதினோராம் பத்திநாதர்: குழந்தைப் பருவத்திலிருந்தே தீயநாட்டங்களை நசுக்கவும், நல்லனவற்றை வளர்க்கவும் ஊக்குவிக்க வேண்டும். மேலாக, இறையருளின் துணையுடன் திருமறைச் சத்தியங்களை உள்ளத்தில் பதித்து உறுதிப்படுத்துதல் நம் கடன். அன்றேல் அவர்கள் தம் சொந்த ஆவல்களை அடக்கியாள முடியாதவர்களாக, திருச்சபை அளிக்கும் போதனையினாலும் பயிற்சியினாலும் நிறைவான — திருப்திகரமான பயனை அடைய முடியாதவர்களாக, இருப்பர். திருச்சபையானது மக்கள் சமுதாயத்துக்கு நற்பயனையளிக்கவல்ல ஆசிரியையாக விளங்க வேண்டுமென்ற உயர் நோக்குடனேயே இறைவன் பரிசுத்த சத்தியங்களையும் திருவருட் சாதனங்களையும் அதற்கு அருளியுள்ளார்'' (Divini illius Magistri)

''தனக்கு ஏற்ற துணைவர் அல்லது துணைவி ஒருவரைத் தெரிந்தெடுப்பதில் அதிக கவனம் செலுத்துவதே திருமணத்திற்கான நெருங்கிய முன்னேற்பாடுகளுள் முதன்மையானது. மணவாழ்வின் மகிழ்ச்சி அல்லது மகிழ்ச்சியற்ற வாழ்வு என்பது தனது துணைவ

னுக்கு அல்லது துணைவிக்கு உற்ற துணையாக அல்லது துயரத்தின் நிழலாக ஒருவர் வாழ்வதிலேயே தங்கியுள்ளது. ஒரு விவேகமற்ற தெரிவு வாழ்வின் இறுதி வரை துயரக்கடலில் தத்தளிக்கும் நிலையையே கொண்டு வரும். ஆகவே திருமணத்திற்கு ஆயத்தமாவோர் முதலில் தாம் தெரிவு செய்பவர் இறுதி வரை இல்லற வண்டியைத் தம்முடன் இணைந்து இழுத்துச் செல்லக் கூடியவரா என்பதை மிக்க கவனத்துடன் சிந்திக்க வேண்டும். இச்சிந்தனையின் போது இறைவனுக்கும் கிறிஸ்துவின் திருமறைக்கும் முதலிடம் கொடுத்தல் வேண்டும். அடுத்து தம்மைப்பற்றியும் தமது எதிர்கால சந்ததியைப் பற்றியும், மனித சமுதாயம் — தமது நாடு பற்றியும் சிந்தனைக்கு எடுத்துக் கொள்ளல் வேண்டும். தம் திருமணம் இவர்களனைவருக்கும் பயன்தரு கருவியாக விளங்குமா என்பதைச் சீர்தூக்கிப் பார்த்தல் பயனுள்ளது. கிறிஸ்துவ விவேகத்துடன் தங்கள் தெரிவை எடுப்பதற்கு தாழ்மை மிகுந்த உள்ளத்துடன் இறைவனை வேண்டுவார்களாக. தகாத தன்னிச்சையான நாட்டங்கள், பணவிருப்பு, வேறு சில்லறைக் காரணங்கள் அனைத்தையும் மனதிலிருந்து அகற்றி தம் துணையாகத் தெரிந்தெடுப்பவர்மீது கொண்டுள்ள நேர்மை, உண்மை மிக்க பாசத்தினாலும் அன்பினாலும் வழி நடத்தப்படுவார்களாக. இறுதியாக தம் அன்னை தந்தையரின் ஆலோசனைகளுக்கும் புத்திமதிகட்கும் மதிப்பளிப்பார்களாக. வயதிலும் அனுபவத்திலும் முதிர்ந்த அன்னை தந்தையரின் ஆலோசனைகளும் வழிநடத்தல்களும் ஏற்றுக் கொள்ளப்படுமானால், பின்னர் அவல நிலைக்கு ஆளாக வேண்டியதில்லை என்பதையும் இளம் தலைமுறையினர் உணர்வார்களாக." (Casti Connubii n. 118-121)

கிறிஸ்தவ திருமணம் ஒரு நிரந்தரக்கூட்டுவாழ்க்கை என்பதனால் திருச்சபையானது அதில் ஈடுபட விரும்புவோரை அதிக கவனத்துடன் வழி நடத்துகிறது.

பொதுவாக கத்தோலிக்கர்கள் ஒரு குருவினதும் இரு சாட்சிகளினதும் சமுகத்திலேயே திருமணத்தை

நிறைவேற்றலாம். ஒரு திருமணம் திருச்சபைச்சட்டங் கட்கு இணங்குகின்றதா என்பதைக் கவனிப்பதுடன், திருமண உடன்படிக்கையின் நோக்கம், பொறுப்பு, அத்திருவருட் சாதனத்தின் முக்கியத்துவம் என்ற அம் சங்களை மணமக்கள் நன்கறிந்துள்ளார்களா என்பதை நுணுக்கமாக ஆராய வேண்டியதும் குருவின் தலையாய கடமை. (திருச்சபைச் சட்டம் 1035 – 1080 , 1864). அப்போதுதான் இறையருள் நிரம்பியவர்களாக மண மக்கள் புனிதமான இல்லற வாழ்வினுள் நுழையமுடியும்

திருச்சபையிலும் அனைத்துலகிலும் அப்போஸ்தல பணியை ஆற்றுவதற்கான ஆயத்தங்கள் கிறிஸ்தவ குடும்பங்கட்கு அவசியம் தேவைப்படுகின்றன. ''பாலப் பருவக் கல்வியிலிருந்தே அப்போஸ்தல பணிக்கான அத்திவாரமிடப்பட்டு, பயிற்சி ஆரம்பிக்கப்படல் வேண் டும்'' என இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் கூறுகின்றது. ஆகவே வளரும் பருவத்தினரும் வாலிப சமுதாயத்தினரும் அப்பேஸ்தலபணியிலே இறங்கி அதன் உணர்விலே நிறைந்திருப்பார்களாக. வாழ்நாள் முழுவ தும், பொறுப்புக்களை அவ்வப்போது கையேற்றுச் செவ் வனே நடத்தும் வண்ணம் இப்பயிற்சி அவர்கட்குச் செவ்வனே அளிக்கப்படல் வேண்டும். ஆகவே கிறிஸ் தவ கல்வியைப் போதிக்கக் கடமையுடையோர் அனை வரும் அப்போஸ்தல பணிக்கான பயிற்சியை வழங்கவும் கடமைப்பட்டோராவர் என்பது தெளிவு.

மனித சமுதாயத்தின் மீது இறைவன் வைத்துள்ள அன்புப் பெருக்கை, பாலப் பருவத்திலிருந்தே தம் குழந்தைகள் அறியவும் உணரவும் செய்வது கிறிஸ்தவ பெற்றோரின் தலையாய கடன். அடுத்து அயலவரின் உடல் உளத் தேவைகளில் அக்கறை காட்டும்படி தம் செயல்களால் வழிநடத்துவது பெற்றோரின் பணியா கும். அப்போது குடும்ப வாழ்வு முழுவதும் அப்போஸ் தல பணிக்கு பயிற்சியளிக்கும் ஒரு களமாய் அமை யும்.'' (A. A. n, 30)

## VI இறிஸ்தவ குடும்பங்களின் சிறந்த மாதிரிகை — திருக் குடும்பம்

அன்பிலும் அனுசரணையிலும் மரியாதையிலும் கிறிஸ்தவ குடும்பங்கட்கு ஒரு மாதிரிகையாக விளங்கு மாறு இறைவன் ஒரு குடும்பத்தை உலகுக்கு அளித் தார். நசரேத்தில் வாழ்ந்த திருக்குடும்பமே அந்த மாதிரிக் குடும்பம். உலகப் பார்வையில் தரித்திரக் கோலத்தில் காட்சி அளித்த இச்சிறு குடும்பம் விண் ணக ஐசுவரியங்களால் நிறைந்து துலங்கியது. மனித நோக்கில் மறைந்ததும் அறியாததுமாக இருந்த போதி லும் வானதூதர்கள் அத்திருக்குடும்பத்தை வாழ்த்தி வணங்கினர்.

மரியாளும் சூசையும் அன்பும் வாழ்வும் நிறைவாக ஒன்றித்த வாழ்வை மேற் கொண்டனர். இவ்வரிய சூழலில் இறைவனுக்கும் மனிதருக்கும் முன்பாக இயேசு ஞானத்திலும் வயதிலும் வளர்ந்து வந்தார், இத்திருக்குடும்பத்தின் இல்வாழ்வு மேடுபள்ளங்கள் நிரம்பியதோர் நீண்ட பயணமாகும். இறைவன் மட்டி லும் ஒருவர் மற்றவர் மட்டிலும் கொள்ள வேண்டிய விசுவாசத்துக்கு எதிராகப் பல பிரச்சனைகளை அவர்கள் சந்திக்க நேர்ந்தது.

மரியாளைப் பற்றிய சந்தேகமும் ஐயுறவும் சூசையை வாட்டி வருத்திய போதும், மறைபொருளாய் அமைந்த மனிதாவதாரத் திட்டத்தை எண்ணி மரியாள் மௌ னத்தில் ஏங்கித் தவித்த போதும், இறைவன் தலை யிட்டு அச்சங்கள் அனைத்தையும் அகற்றி, ஐயுறவை நீக்கி, மறைபொருளை வெளிப்படுத்தினார். ஏனெனில் சூசை நீதிமானாகவும் மரியாள் இறைவார்த்தையில் விசுவாசம் கொண்டவளாகவும் விளங்கினர்.

மிகப் பயங்கரமான பிரச்சனைகளை அவர்கள் எதிர் கொள்ள வேண்டியிருந்தது. செசாரின் குடிமதிப்பு

ஆணைக்கு அடிபணிந்து பெத்லகேம் சென்றனர். முன்னறிந்திராத எகிப்து நாட்டுக்கு இரவோடிரவாக பயணம் செய்தனர். ஜெருசலேம் ஆலயத்தில் இயேசுவை இழந்து தவித்தனர். நாசரேத்தில் தச்சுத் தொழிலாளியின் சாதாரண வருவாயில் ஏழ்மையின் பிடியில் பல ஆண்டுகள் வாழ்ந்தனர். இச் சந்தர்ப்பங்களிலெல்லாம் மரி சூசை தம்பதிகள் இறைவனின் திருவுளத்துக்கு அன்போடு பணியும் பண்புள்ள கணவன் மனைவியாக பாசம் நிரம்பிய அன்னை தந்தையாக விளங்கினர்.

இத்திருக் குடும்பத்தில் உருவான இல்லத் திருச்சபை கிறிஸ்துவின் மீட்புப் பணியாக பிரவாகித்து அனைத்துலகுக்கும் பரந்து செல்கின்றது. இவ்வன்புத் தம்பதிகள் தம் அறநெறி வாழ்வின் சன்மானமாக பெற்றுக் கொண்டவை எம்மால் என்றுமே மனதிலிருத்திக் கொள்ள வேண்டியவை. இயேசுவினதும் மரியாளினதும் அரவணைப்பில் நல்மரணம் அடையும் பேறு சூசைக்குக் கிடைத்தது. மரியாள் கல்வாரிவரை தைரியத்துடன் சென்று சிலுவையடியில் உறுதியுடன் நின்று இயேசுவுடன் துணை மீட்பர் ஆனாள்.

வாழ்வின் வழியில் சுகதுக்கங்கள் சூழ்ந்து வரும் போது இத்திருக் குடும்பத்தினை நோக்க வேண்டியது கிறிஸ்தவ குடும்பங்களின் தலையாய கடமையாகும். திருக்குடும்பத்தில் நிலவிய நம்பிக்கையும் உறுதியும் ஒவ்வொரு பிரச்சனையின் போதும் கிறிஸ்தவ குடும்பங்கட்கு அத்தியாவசியம் தேவைப்படும். இயேசு, மரி, சூசையிடம் விளங்கிய புண்ணியங்களைக் கிறிஸ்தவ குடும்பங்கள் கைக்கொண்டு, இறைபணியிலும், மக்கள் பணியிலும் சிறந்து விளங்குவார்களாக. இந்த உன்னத அப்போஸ்தலப் பணியால் கிறிஸ்துவின் மீட்புப்பணி தொடர்ந்து நடைபெற உதவுவார்களாக.

+

+

மங்களம் மரியே




## செபம்

இறைவா, திருக்குடும்பத்தை
இல்லறத்தின் புண்ணியங்களுக்கும்
அன்பின் உறவுகளுக்கும்
சிறந்த எடுத்துக் காட்டாக
எங்களுக்கு அளித்திருக்கிறீர் :
உமது இரக்கத்தால், நாங்கள்
அக் குடும்பத்தைப் பின்பற்றி,
உமது முடிவற்ற சம்பாவனையைப்
பெற்று மகிழச் செய்தருளும்
எங்கள் ஆண்டவராகிய
கிறிஸ்து யேசுவின் வழியாக
உம்மை இரந்து மன்றாடுகின்றோம்
ஆமென்.

பாஸ்கா ஞாயிறு

**6 - 4 - 1980**



‘அளவோடு பெற்று வளமோடு வாழுங்கள்’ என்று கூறி குடும்ப வளத்திற்கு குழந்தைகளின் எண்ணிக்கையை அளவு கோலாக்கி விட்டது அரசு ! குடும்ப வளத்தின் உண்மையான அளவுகோல் **அன்பே !**

அந்த அன்பு அளவைக் கடந்தது ! எண்ணிக்கைக்குள் அடங்காதது ! எனவே

**‘அன்போடு பழகி பண்போடு வாழுங்கள் !’** என்பது நம் கிறிஸ்தவ குடும்பங்களின் விருது மொழியாக அமைவதாக !



ஆர் எஸ் அச்சகம், யாழ்ப்பாணம்.